ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# தமிழ் இலக்கியங்களிவ் விருந்தோம்பலின் சிறப்பு

**லெ.புவனேஸ்வரி[1] & முனைவர் தி. பார்த்திபன்[2]**

**[1]முனைவர் பட்ட ஆய்வாளர் & [2]உதவிப்பேராசிரியர்**

**மெய்யியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் – 613010.**

bhuvan76eswari@gmail.com

22

**ஆய்வுச் சுருக்கம்**

நமது சாஸ்திரங்களும், தர்மங்களும், வேதங்களும், அறநூல்களும் நமக்கு வகுத்துத் தந்துள்ள பல்வேறான பண்பாட்டு விழுமியங்கள் ஏராளமாகவும், தாராளமாகவும் உள்ளன. அவற்றில் மிக முக்கியமான ஒன்றும் ஆனால் தற்போது அவசர கால யுகத்தில் மறந்துபோனதும் மேலும் நாம் விடாமல் கடைப்பிடிக்க வேண்டியதுமான விருந்தோம்பல் பண்பியலின் சிறப்பினையும், முக்கியத்துவத்தையும் விளக்குவதோடு நல்ல பழக்கங்களை வலியுறுத்தியும், வற்புறுத்தியாவது மீண்டும் கொண்டு வர வேண்டும் என்ற நோக்கத்தோடு அமைந்ததே இக்கட்டுரையாகும்.

**திறவுச் சொற்கள்:** விருந்தோம்பல், பண்பாடு, விழுமியம், தர்மம், அறம்

**முன்னுரை**

ஆதிகாலம் தொட்டே மனிதர்கள் பிரம்மச்சாரி, இல்லரத்தான், வானப்பிரஸ்தன், துறவி என நான்கு வகையாக பிரித்துக் கூறுவர். இதில் இல்லரவாசிகள் தான் மற்ற மூவகையினருக்கு உணவளித்து பாதுகாத்து வந்தார்கள். இதைத்தான் வேதமும் ரிஷி கடன், பிதுர் கடன், தேவர் கடன், சக மனிதர்களுக்கான உபசாரம் மற்றும் அனைத்து ஜீவராசிகளுக்குமான பசியை போக்குவது. இவை அனைத்தையும் தீர்ப்பது என்பதே இல்லத்தாரின் முதற்கடமையாகும். கடவுள் முதல் காலம் சென்றோர் வரை உள்ள அனைவருக்கும் உணவளிப்பதே நம் பாரதப் பண்பாட்டின் சிகரம் போன்ற உயர்ந்த பழக்கம் என்றால் மிகையாகாது. முன்பெல்லாம் உணவையே மருந்தாக எடுத்துக்கொண்டு நோயின்றி வாழ்ந்தனர். பஞ்சபூதத்தையும் பயன்படுத்தி நெருப்பில் வாட்டியும், ஆவியில் அவித்தும், நீரில் வேக வைத்தும், வெயிலில் காய வைத்தும், மண்ணில் இருந்து பயிறுகள் மட்டுமின்றி மூலிகைகளையும், கிழங்குகளையும் பயிரிட்டு உண்டனர். காட்டுவாசிகளும், காட்டில் வாழ்கின்ற முனிவர்களும், யோகியர்களும் கூட கிழங்கு மற்றும் கனி வகைகளை உண்டு வாழ்ந்தனர். அறுசுவையும் கலந்து சரிவிகித உணவாக பயன்படுத்த அறிந்தவர்கள் நம் பாரத மக்கள் மட்டுமே. அப்படி பக்குவமாய் பார்த்துப்பார்த்து சமைத்தவற்றை சுயமாக தங்களுக்கென்று மட்டும் சமைக்கும் பழக்கம் பழங்காலத்தில் இல்லை. விருந்துக்கென்று வீட்டிற்குள் வந்தவர்களுக்கு மட்டுமின்றி வறியவர், பெரியவர், முதியவர், ஏழை எளியோர், விலங்கினங்கள், உயரினங்கள் அனைத்திற்கும் உணவு வழங்கினர். அனைத்து ஜீவராசிகளுக்கும் வயிறும் உயிரும் உண்டு என்பதால்தான் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்று போற்றப்பட்டனர். இதை விளக்குவதுதான் இக்கட்டுரையாகும்.

**பண்பாடும் - விழுமியமும்**

பண்பாடு என்பதற்கு சூழலமைவுடன் பொருந்திய மக்கள் பின்பற்றிய ஒழுகலாறு என்பது பொருள்படுகிறது. மேலும் பண்பாடு என்பது "பண்படுதல்" என்பதை அடியொற்றி வருகின்றது. இதையே கலித்தொகையிலும் புறநானூற்றிலும் பின்வரும் வரிகள் விளக்குகின்றன

**"பண்பெனப்படுவது பாடறிந்தொழுகுதல்"** [1]

**"பாடறிந்து ஒழுகும் பண்பி னோரே"** [2]

உற்ற சூழலை கற்றுணர்ந்து அதற்கு ஏற்ப ஒழுகும் பண்பினையுடையவர்கள் என பண்பாட்டிற்குரிய விளக்கங்களைச் சான்றோர்கள் முன்மொழிகின்றனர். விழுமியம் என்பது அறத்தைக் குறிக்கும். மக்கள் பின்பற்ற வேண்டிய அறவொழுக்கக் கூறுகள் அனைத்தும் விழுமியங்கள் ஆகும். இதன்வழி, பண்பாட்டு விழுமியங்கள் என்பது மக்கள் பின்பற்றிய அல்லது பின்பற்ற வேண்டிய அறவொழுக்கங்கள் மக்களிடையே பழக்கவழக்கமாக மாறும் நிலையை அல்லது பழக்குவித்தலைப் பண்பாட்டு விழுமியம் என வரையறை செய்யப்படுகிறது. ஒழுக்கம், கல்வி, ஈகை, இரக்கம், நன்றி அறிதல், வாய்மை, அன்பு, அருள், விருந்தோம்பல், நாட்டுப்பற்று, உலக ஒருமைப்பாடு போன்ற பல வகையான பண்பாட்டு விழுமியங்களில் இருந்து விருந்தோம்பல் என்ற பண்பாட்டுச் சிறப்பினைப் பற்றி விளக்குவதே இக்கட்டுரையாகும்.

**உணவின் முக்கியத்துவம்**

மனிதன் உயிர்வாழத் தேவையான அடிப்படைக் கூறுகளில் முதன்மையிடம் உணவிற்கு உண்டு. உணவிற்கான இன்றியமையாமையையும் உணவிடுபவரின் புகழையும் மணிமேகலை பின்வருமாறு குறிப்பிடுகிறது.

**உண்டி கொடுத்தோர் உயிர்க் கொடுத்தோரே** [3]

உணவு கொடுத்தவர்கள் உயிர் கொடுத்தவர்களுக்குச் சமம் என்கிறது இப்பாடல். எனவேதான் மணிமேகலை அள்ள அள்ள குறையாத அட்சயபாத்திரத்தை வைகாசிப் பௌர்ணமி நாளன்று புத்தரின் கருணையினாலும் ஆசிர்வாதத்தாலும் பெற்று அதில் ஆதிரை எனும் கற்புக்கரசியின் திருக்கரத்தால் முதல் உணவைப் பெற்றாள். அந்த அன்னமானது குன்றாமல், குறையாமல் அள்ள அள்ள வளர்ந்தது (அட்சயம் என்றால் வளர்வது). அதை அனைவருக்கும் வழங்கி பிறரின் பசிப்பிணியைப் போக்கினாள்.

இதைத்தொடர்ந்து பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த வள்ளலார் பெருமானும் ஒருவன் பசியினால் வாடுவது நரகத்திற்கு ஒப்பாகும். ஏனெனில் மற்ற பிணி காலப்போக்கில் சரியாகிவிடும். ஆனால் பசி என்பது தீராப்பிணிபோல் காலமெலாம் வாட்டி வதைக்கும் என்றும் அதிலிருந்து மக்களைக் காக்கவே வட லூரில் நூற்றைம்பத்துமூன்று ஆண்டுகளுக்கு முன் ஏற்றிவைத்த அணையா அடுப்பின் மூலம் இன்றும் மக்கள் பசியை போக்க அன்னதானத்தை வள்ளலார் செய்து காட்டிய வழியில் இன்றும் கடைபிடித்துக் கொண்டிருக்கின்றனர் அவரது அடியவர்கள். இவ்வாறாக ஒருவரின் பசிதீர்ந்த நிலையில் அவரின் முகத்தில் காணப்படும் ஒளிதான் சொர்க்கம் என்கிறார் வள்ளலார்.

இந்தக் கருத்தாழத்தின் அடிப்படையில்தான் காமராஜரும் குழந்தைகளின் எதிர்காலத்தை

முன்னிட்டு அவர்களுக்கு வயிறு காய்ந்து கிடக்கிற நிலையில் கல்வியை கொடுக்க முடியாது என்பதாலும், ஒருவருக்கு கிடைக்கும் கல்வியால் அவர் குடும்பத்தையே, சந்ததியையே வாழவைக்க முடியும் என்பதால்தான் மதிய உணவை வழங்கி காமராஜர் அவர்கள் குழந்தைகளின் கல்விக்கண்ணைத் திறந்தார். வற்றாத கல்விச்செல்வத்தை வயிற்றுப்பசியை போக்கிய பிறகுதான் கொடுக்கமுடியும் என்பதை அந்த மேதை நன்கு உணர்ந்திருந்தார்.

**உணவிடுதலில் பாகுபாடு கூடாது**

**"ஆர்க்கும் இடுமின் அவர்இவர் என்னன்மின் பார்த்து**
**இருந்து உண்மின் பழம்பொருள் போற்றன் மின் போற்றன்மின்"** [4]

இதில் வேண்டியவர், வேண்டாதவர் என்று பாகுபாடின்றி அனைவருக்கும் உணவளிக்க வேண்டும், பழைய உணவை பாதுகாக்க நினைக்க கூடாது என்றும் பேராசை கொண்டு உணவை மிக வேகமாக உட்கொள்ள நினைக்க கூடாது என்றும் விளக்குகிறார். விருந்தோம்பல் என்ற பண்பாடு பற்றி வள்ளுவர் பின்வருமாறு விளக்குகிறார். இப்பிறவியில் தன்னிடம் வந்த விருந்தினரை உபசரித்து, மேலும் வரக்கூடிய விருந்தினரை எதிர்பார்த்திருப்பவன் மறுமையில் தேவனாய் வானுலகில் வாழும் தேவர்க்கும் நல்ல விருந்தினன் ஆவான் என்கிறது திருக்குறள். இதன்மூலம் தமிழர் பண்பாட்டில் விருந்தோம்பலின் முக்கியத்துவம் பற்றி நன்கு உணரலாம்.

**"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
**நல்விருந்து வானத் தவர்க்கு"** [5]

**கொல்லாமை**

விருந்தோம்பல், விருந்து என்கிற பெயரில் பிற உயிர்களை வதைப்பது கூடாது. அனைத்து சமயத்தினரும் வலியுறுத்தும் செயல் ஒன்றுதான் கொல்லாமை. பஞ்சமா பாவங்களில் ஒன்றுதான் உயிர்கொலை. பிற உயிர்களைக் கொன்று உண்ணுவது பாவமாக கருதியவர்கள் சித்தர்கள். இதையே பத்திரகிரியார் பின்வருமாறு கூறுகிறார்

**"மண்ணுயிரைக் கொன்று வதைத்து உண்டு உழலா**
**தன்னுயிர்போல எண்ணித் தவம்முடிப்பது எக்காலம்"** [6]

பின்வரும் குறளும் இதையே விளக்குகிறது. அதாவது பல வேள்விகளை செய்வதால் கிடைக்கும் பலனை விட, புலால் உண்ணுதலைக் கைவிடுவதால் வரும் பலன் மிக்க உயர்ந்ததாகும் என்கிறது.

**"அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்**
**உயிர்செகுந்து உண்ணாமை நன்று"** [7]

**திருக்குறளில் விருந்தோம்பல்**

**"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா**
**மருந்தெனினும் வேண்டற்பாற் நன்று"** [8]

என்பதுபோல, சங்க கால மக்கள் தன் உற்றார் உறவினரேயன்றி, புதிதாக தன் இல்லம் நாடி நள்ளிரவில் வருபவர்களுக்கும், 'மருந்தே ஆயினும் விருந்தோடு உண்' என்ற கொள்கையினைக்

கொண்டு வாழ்ந்து அவர்களுக்கு அறுசுவை அடிசில் நல்கி சிறப்பு செய்வித்ததை இலக்கியத்தில் காணலாம்.

**குறுந்தொகையில் விருந்தோம்பல்**

பழங்காலத்தில் வீட்டின் முன்புறம் திண்ணைகள் அமைக்கப்பட்டு இருந்தது. இத்திண்ணைகள் நாடோடிகள், வழிப்போக்கர்கள், துறவிகள் தங்குவதற்காக அமைக்கப்பட்டன என்பது புலப்படுகின்றது. பழந்தமிழர்கள் இரவு நேரங்களில் உறங்கச் செல்வதற்கு முன்பு தமது இல்லத்துத் திண்ணையில் யாரும் விருந்தினர்கள் தங்குகிறார்களா என்று பார்த்துத் தெளிந்த பின்னரே கதவடைப்பது வழக்கமாக இருந்தது. இச்செய்தியினை,

**"பலர்புகு வாயி லடைப்பக் கடவுநர்**
**வருவீர் உளீரோ எனவும்"** [9]

என்ற வரிகள் மூலம் அறியலாம். இன்றளவும் கிராமப்புறங்களில் இப்பண்பாடானது வழக்கத்தில் இருப்பதைக் காணமுடிகிறது.

**ஆசாரக்கோவையில் விருந்தோம்பல்**

**'விருந்தினர் மூத்தோர்'**[10] என்னும் பாடல் உண்பதற்கு முன் செய்ய வேண்டிய பண்பாடுகளை விளக்குகிறது. உண்பதற்கு முன் விருந்தினருக்கு, மூத்தோருக்கு. பசுக்களுக்கு, பறவைகளுக்கு, பிள்ளைகளுக்கு உணவு கொடுத்துவிட்டு உண்ணுபவரே என்றும் ஒழுக்கம் தவறாதவர் ஆவார்.

**பகைவனுக்கும் விருந்தோம்பல்**

தமிழர்களின் பாரம்பரிய பழக்கவழக்கங்களில் ஒன்று வீட்டிற்கு வரும் விருந்தாளிக்கு சுவையான உணவு அளிப்பது மட்டுமின்றி பின்வரும் ஐங்குறுநூறுப் பாடலில் எதிரியையும் நண்பனாக ஆதரித்து அரிசிச் சோறு வழங்க வேண்டும் என்கிறது.

**"வாழி ஆதன் வாழி அவினி**
**பகைவர் புல் ஆர்க; பார்ப்பார் ஒதுக**
**என வேட்டோளே யாயே"** [11]

**சிலப்பதிகாரத்தில் விருந்தோம்பல்**

கோவலன் தன்னைவிட்டுப் பிரிந்திருந்த சமயத்தில் தன் வாழ்வில் ஏற்பட்ட இழப்புகளைப் பற்றிக் கூறும்போது சான்றோர் போற்றும் சிறப்புடைய விருந்தினை வரவேற்று உபசரித்தலை இழந்ததாகக் கூறி வருந்தினாள் கண்ணகி என அறவழிச் செல்வோர்க்கு உணவு அளித்தலும், அந்தணர்களைப் பேணுதலும் விருந்தினர்களை உபசரித்தல் போன்ற அறங்களைச் செய்ய இயலாததை எண்ணி வருந்தினாள் என்பதை சிலப்பதிகாரத்தில் பின்வரும் வரிகள் விளக்குகின்றன.

**அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்**
**துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்**
**விருந்தெதிர் கோடலும்** [12]

பின்வரும் குறளும் இதையே விளக்குகிறது. அதாவது மனைவியோடு சேர்ந்து இல்லற

வாழ்க்கை வாழ்வது விருந்தினரை உபசரிப்பதற்கே என்று விருந்தோம்பல் அதிகாரத்தில் குறள் உணர்த்துகிறது.

**"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு"** [13]

**பசிப்பிணியின் கொடுமை**

பசிப்பிணி என்பது மிகவும் கொடியது. பசிவந்தால் பத்தும் பறந்துபோகும் என்பார்கள். பசி ஒருவருக்கு வந்துவிட்டால் குடிப்பிறப்பு அழியும், தூய்மையான இயல்புகள் சிதைந்துவிடும். கல்வியாகிய பெரிய செல்வத்தையும் போக்கிவிடும். நாணம், அழகு ஆகியன சிதைந்துவிடும். மனைவியோடு கூடிநின்று கடையினிலே இரந்து நிற்கும் நிலைமையும் ஏற்படும். இந்நிலையைப் போக்கி உணவளித்தோரை இவ்வுலகம் புகழ்ந்து போற்றும் என்று மணிமேகலையில் பின்வருமாறு கூறப்படுகிறது.

**"குடிப்பிறப்பு அழிக்கும், விழுப்பம் கொல்லும்**
**பிடித்த கல்வி பெரும்புனை விடூஉம்;**
**நாணணிகளையும்; மாணெழில் சிதைக்கும்;**
**பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்**
**பசிப்பிணி என்னும் பாவி"** [14]

**விருந்தோம்பலின் அதிஉன்னதச் சிறப்பு**

அச்சணந்தி அடிகள் என்பவர் தன் மகனுக்கு அரச பதவி அளித்து தவம் மேற்கொள்ள சென்றார். தீவினைப் பயனாய் யானைப்பசி நோய் தாக்கியதால் தவம் மேற்கொள்ள இயலாது மாடங்கள் நெருங்கிய ஏமாங்கத நாட்டின் தெருவில் நுழைந்தார். அப்போது உணவு படைக்கும் முறையறிந்த மகளிர் பரிமாற உணவை உண்ணும்போது, அச்சணந்தி அடிகள் செல்வதைப் பார்த்து எதிர்சென்று அன்பாக அழைத்து, பசுக்களின் இனிய பால் முழுவதையும் வற்றச் சுண்டக்காய்ச்சி வேகவைத்த அமிழ்தம் போன்ற உணவைப் பசியாற விருந்தளித்தார். இதனை

**புடையிரு குழையும் மின்னப்பூந் துகில் செறிந்த அல்குல்**
**நடையறி மகளிர் ஏந்த நல்லமிர்து உண்ணும் போழ்தில்**
**இடைகழி நின்ற என்னை நோக்கிப்போந்து ஏறுக என்றான்**
**கடல்கெழு பருதி அன்ன பொன்கலத்து எனக்கும் இட்டார்** [15]

இப்பாடல் விளக்குகிறது. அச்சணந்தி அடிகளார்க்கு பேரன்புடன் உவந்து விருந்து அளித்ததனையும் தீராத யானைப்பசி நோய் இவ்விருந்தோம்பலால் கழிந்தது என்று சீவகனிடம் தன் வரலாற்றைக் கூறும்போது விளக்கப்படுகிறது. அச்சணந்தி அடிகளுக்கு உபசரித்த தன்மையை,

**கைகவி நறுநெய் பெய்து கன்னல் அம் குடங்கள் கூட்டிப்**
**பெய்பெய் என்று உரைப் யானும் பெருங்கடல் வெள்ளிக் குன்றம்**
**பெய்து தூர்க்கின்ற வண்ணம் விலாப்புடை பெரிதும் வீங்க**
**ஐயனது அருளி னால்யான் அந்தணர் தொழிலன் ஆனேன்** [16]

இப்பாடல் இச்செய்தியை விளக்குகிறது. விருந்தோம்பல் யானைப்பசி நோயை தீர்த்தது என்றால் எத்துணை சிறப்புமிக்க பண்பாடு விருந்தோம்பல் என்பதை அறியலாம். இத்தகைய ஒப்பற்ற விருந்தோம்பல் பண்பாடு இன்றும் தமிழரிடம் மரபாக இருப்பதைக் காணலாம்.

**முடிவுரை**

உலக மக்கள் அனைவருமே தத்தம் வினைப்பயன் காரணமாகவே பிறவி எடுத்து வந்துள்ளோம். அவ்வாறாக நாம் கொண்டுவந்த வினைகளைத் தீர்ப்பதற்கு தொண்டு ஒன்றே வழி. எனவே நாம் அனைவரும் தனக்கென வாழாமல் கொடுத்து வாழ பழகிக் கொள்வது என்பது மிகவும் இன்றியமையாதது ஆகும். எனவேதான் திருமூலர் திருமந்திரத்தில் கடவுளுக்காக ஒரு பச்சிலையோ அல்லது எல்லா தேவர்களும் வாழுகின்ற பசுவுக்கு ஒருபிடி உணவோ அல்லது நாம் உண்ணும்போது பறவைகள், எறும்புகள் போன்றவற்றிற்கு சிறிதளவு உணவோ வழங்கலாம். அவ்வாறு எதுவும் வழங்க முடியாவிட்டாலும்கூட ஓர் இனிய சொல்லாவது பிறருக்கு ஆறுதலாக கூற வலியுறுத்துகிறார். தமிழில் தனக்கு மிஞ்சிதான் தானமும் தர்மமும் என்ற பழமொழி உண்டு. அதன் பொருள் என்னவென்றால் தனக்கு மீந்ததைக் கொடுக்க வேண்டும் என்பதல்ல. அதாவது நாம் எவ்வளவு சம்பாதித்தாலும், சேமித்து வைத்திருந்தாலும் பணம், பதவி, பகட்டு எதுவும் நம்மோடு வராது யாருக்கோ போய்விடும். அப்படியெனில் நமக்கு என்னதான் மிஞ்சும் என்றால் தானமும் தர்மமும் செய்திருந்தோமானால் நம் இறப்பையும் மிஞ்சி வாழ்வாங்கு வாழவைக்கும் என்பதாகும். எல்லா தானமும் முடியாவிட்டாலும் கூட அன்னதானத்தையாவது பிரதானமானதாகக் கொள்ளவேண்டும்.

சைவ அடியார்க்கு உணவு அளிக்க ஒன்றுமில்லாததால் வயலில் விதைத்த நெல்லைக்கொண்டு வந்து உணவு சமைத்துக் கொடுத்தவர் **மாறனார் நாயனார். பிள்ளைக் கறியை** இறைவனுக்குக் கொடுத்தவர் **சிறுத்தொண்டர் நாயனார். மாவடுவைப்** படைத்து மகிழ்ந்தார் **அரிவாள் தாய நாயனார் (அரிவாட்டாய நாயனார்)**. ஆக விருந்தோம்பல் எந்த அளவிற்கு உயர்வானதோ அதே அளவு உயர்வானது என்னவென்றால் அவ்விருந்தை ஏளனம் செய்யாமலும், மறுக்காமலும் உள்ளன்போடு ஏற்றுக்கொள்வதே ஆகும். இதனால்தான் புத்தர் தனது சீடர் கொடுத்த விருந்தில் உள்ள காளான் நச்சுத்தன்மைக் கொண்டது என்று தெரிந்தும்கூட மனப்பூர்வமாக சீடரின் அன்பிற்காக தானும் அன்போடு ஏற்றுக்கொண்டார். பகவான் ஸ்ரீகிருஷ்ணரும் தனக்கு ஓர் இலை, பூ, பழம் ஏதுமில்லாவிட்டாலும் நீரையாவது அன்போடு கொடுத்தால் போதும். அதை பரி பூரணமாக ஏற்றுக்கொள்வேன் என்கிறார். எனவே நாம் இறைவன் முதல் அடியவர், எளியவர் வரை அனைவருக்கும் அன்பையும், அன்னத்தையும், அறத்தையும் வழங்கி மகிழ்வோமாக.

**மேற்கோள்கள்**

1. கலித்தொகை, பாடல் 133
2. புறநானூறு, பாடல் 197
3. மணிமேகலை, பாடல் 11.96
4. திருமந்திரம், பாடல் 250
5. திருக்குறள், குறள் 86

**6.** சித்தர் பாடல்கள், பாடல் 15
**7.** திருக்குறள், குறள் 259
**8.** மேலது, குறள் 82
**9.** குறுந்தொகை, பாடல் 118
**10.** ஆசாரக்கோவை, பாடல் 21
**11.** ஐங்குறுநூறு, பாடல் 4.2
**12.** சிலப்பதிகாரம், பாடல் வரி 71
**13.** திருக்குறள், குறள் 81
**14.** மணிமேகலை, பாடல் 76
**15.** சீவகசிந்தாமணி, பாடல் 399
**16.** மேலது, பாடல் 400

**சான்றெண்விளக்கம்**

1. புலியூர்க் கேசிகன், கலித்தொகை (மூலமும் உரையும்), சாரதா பதிப்பகம், சென்னை- 14
2. புலியூர்க் கேசிகன், புறநானூறு (மூலமும் உரையும்), சாரதா பதிப்பகம், சென்னை- 14, 2010
3. ச. வே. சுப்பிரமணியன், ஐம்பெருங்காப்பியங்கள் மூலமும் தெளிவுரையும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை - 08, 2013
4. புலவர் அடியன் மணிவாசகன், திருமந்திரம், சாரதா பதிப்பகம், சென்னை - 14, 2009
5. எம். நாராயணவேலுப்பிள்ளை, திருக்குறள், நர்மதா பதிப்பகம், சென்னை - 17, 2012
6. தமிழ்ப்பிரியன், சித்தர் பாடல்கள் மூலமும் உரையும், கற்பகம் புத்தகாலயம், சென்னை - 17, 2021
7. புலியூர்க் கேசிகன், குறுந்தொகை (மூலமும் உரையும்), சாரதா பதிப்பகம், சென்னை- 14
8. பத்மதேவன், தமிழ்ப்பிரியன், நீதிநூல் களஞ்சியம், கொற்றவை வெளியீடு, சென்னை - 17, 2016
9. புலியூர்க் கேசிகன், ஐங்குறுநூறு (மூலமும் உரையும்), சாரதா பதிப்பகம், சென்னை- 14